**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**
**OS No.25/2022**

பிரதிவாதி தரப்பு 3 **வது சாட்சி முரளி** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.அரவிந்த், பெஞ்ச் கிளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

## Chief Examination of DW.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முரளி | வயது | : | 35 |
| தந்தை பெயர் | : | **மோகன்தாஸ்** | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கோவிலூர் | தொழில் | : | **கிராம நிர்வாக அலுவலர்** |

நாள் : 23.01.2026

முதல் விசாரணை

**1)** நான் தற்போது கந்தர்வக்கோட்டை தாலுகா, கோவிலூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **(மேற்படி செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, நிலஉடைமை மேம்பாட்டுத்திட்ட அ பதிவேட்டின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன்.**( மேற்படி நிலஉடைமை மேம்பாட்டுத்திட்ட அ பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **(மேற்படி நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2)** ஆரம்பக்காலத்தில் இருந்து தற்போது வரை மேற்படி சொத்து நத்தம் வகைபாட்டில் இருந்து வருகிறது. நான் தாவா சொத்தினை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அதில் என்ன உள்ளது என்றால் ஆஸ்பெஷ்டாஸ் சீட் வீடு உள்ளது. அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார் என்றால் அய்யாவு மனைவி மங்கையற்கரசி என்பவர் குடியிருந்து வருகிறார். அந்த தெருவிற்கு பெயர் வாணியச்செட்டியார் தெரு ஆகும்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) சா.சா.ஆ.3 அடங்கல் ஆவணத்தில், புல எண் 361/16 இல் கண்ட சொத்து, சர்கார் புறம்போக்கு நத்தம் என்ற வகைபாட்டில் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக நத்தம் சொத்திற்கு, அதில் வீடு இருந்தால் அடங்கல் ஆவணத்தில் குறிப்பிடப்படும் என்றால் சரியல்ல, புன்செய் நிலத்திற்கு மட்டும் தான் காண்பிப்பார்கள். நான் எடுத்து வந்துள்ள நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் உள்ள மற்ற புல எண்களுக்கான சொத்தில் இரயத்து மனை என குறிப்பிட்டு, அது யார் பெயரில் உள்ளது என்ற குறிப்பும் உள்ளதா என்றால் உள்ளது, அரசு புறம்போக்கு நத்தம் சொத்திற்கு, அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

2) நத்தம் வகைபாட்டில் உள்ள சொத்திற்கு, நத்தம் செட்டில்மெண்ட் காலத்திற்கு முன்பு, 30 வருடங்களுக்கு முன்பு, ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணம் இருக்கும்பட்சத்தில், அந்த இடத்திற்கு பட்டா பெற முடியும் என அரசாணை உள்ளது என்றால் உள்ளது. புல எண் 361/16 இல் கண்ட சொத்திற்கு, ரெத்தினசாமி செட்டியார் என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பு எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு தெரியவில்லை. மேற்படி சொத்து சம்மந்தமாக நான் யாரை விசாரணை செய்தேன் என்பது குறித்து, எழுத்து மூலமாக வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து, வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் மங்கையற்கரசி குடியிருந்து வருவதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**